ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2130/48 - 2019 ජූලි මස 05 වැනි සිකුරාදා - 2019.07.05

2130/48 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: ஸ்ரீ ஜயவர்தன/காசு/68/NWSDB.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தின், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலாளர் பிரிவில், 514 ஏ, வெலிகட மேற்கு கிராம அலுவலர் பிரிவில், வெலிகட கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இல. கொ 9827 மற்றும் 2019.05.16 ஆந் திகதியுடைய ஆரம்ப வரை படத்தில் துண்டு இல. 01 எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முழு விஸ்தீரணத்தில் 0.0316 ஹெக்டயார் விஸ்தீரணம் உடைய கீழே விபரிக்கப்பட்டுள்ள காணி :

**துண்டு இல. 1**

காணியின் பெயர் : மில்லகஹவத்த மதிப்பீட்டு வரி இல. 219/1, ராஜகிரிய வீதி; விபரம்: வீட்டுத் தோட்டம், கட்டிடமொன்றின் ஒரு பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: எம். ஏ. யூ. பிரநான்து, கடுதெனியவத்த, போபிடிய; விஸ்தீரணம் : 0.0316 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகை யையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வை. கே. ஷிரோமி ஜீவமாலா,
பிரதேச செயலாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.

பிரதேச செயலகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
2019, யூலை 04.

7 - 682

1A - G 30457 — 12 (2019/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*